
# இலங்கை நூலகச்சங்கம் செய்திமடல்

தொகுதி 38 இல. 01 ஆடி - புரட்டாதி 2021 ISSN 1391 -2531

## நூலகமும் தகவல் விஞ:ஞானமும் தேசிய மாநாடு 2021 (NACLIS 2021)



கலாநிதி ருவான் கமகே
தலைவர் -SLLA



பேராசிரியர் நிலந்தி டீ சில்வா
துணைவேந்தர் -களனிப் பல்கலைக்கழகம்



கலாநிதி தரங்க ரணசிங்க
Convener- NACLIS 2021



நாமளி சுரவீர மற்றும் திரு.எஸ். சாந்தரூபன் - அமர்வுகளிற்கான தலைவர்கள் – NACLIS 2021

இலங்கை நூலகச் சங்கத்தின் 16வது நூலகமும் தகவல் விஞ:ஞானமும் தேசிய மாநாடு கடந்த 2021 செப்ரெம்பர் 11ந்திகதி சனிக்கிழமை நிகழ்நிலையில் நடைபெற்றது. "நூலக மாற்றத்தின் மூலம் நிலைத்தன்மையை நோக்கி நகர்தல்" எனும் கருப்பொருளில் இவ்வருடத்திற்கான நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தேசிய மாநாடு, புதிதாக உருவாக்கப்பட்ட நூலக தகவல் விஞ்ஞான ஆய்வுக் குழுவினால் (NACLIS குழு என பெயர் மாற்றம் செய்யப்பட்ட) ஒழுங்கு செய்யப்பட்டது

இதன் ஆரம்ப விழாவில் பேராசிரியர் நிலந்தி டீ சில்வா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, நிலையான அபிவிருத்தியில் நூலகங்களின் முக்கியத்துவம் பற்றி கோடிட்டுக் காட்டி விழாவை மெருகேற்றினார். கலாநிதி கிருஷ்டீனா மதுஷியாக், இணைப் பேராசிரியர், நூலக தகவல் விஞ்ஞானம், டென்வர் பல்கலைக்கழகம், (அமெரிக்கா) அவர்கள் எண்ணிம கலாசார பாரம்பரிய திட்டங்களின் நிலைத்தன்மை எனும் தலைப்பில் சிறப்புப் பேருரையை நிகழ்த்தினார்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட் ஆய்வுக்கட்டுரைகளின் இரு தொழில்நுட்ப அமர்வுகள் இடம்பெற்றன. அனைத்து ஆய்வுச் சுருக்கங்களும் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் ISBN மற்றும் ISSN ஆகியவற்றைக் கொண்ட இலத்திரனியல் மாநாட்டு மலரில் வெளியிடப்பட்டன. ஆரம்ப விழாவிலும் தொழில்நுட்ப அமர்வுகளிலும் பதிவு செய்த நூற்றுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர். மேலும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தேசிய மாநாடு இலங்கை நூலகச் சங்க அலுவலக யூரியுப் அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டது.

### உள்ளே

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தேசிய மாநாடு 2021 (NACLIS 2021) 01
ஊடக நூலகங்களும் அவற்றின் செயற்பாடுகளும் - இணையக் கருத்தரங்கு 02
நூலகங்களில் ISO தராதரத்திற்கான அறிமுகமும் 5S முறையியலும் 02
மாற்றத்திற்கான சந்தர்ப்பமாக உள்ள நெருக்கடிச்சூழ்நிலை – இணையத்தினூடாக பயிற்சிப்பட்டறை 02
ஒரு புதிய பாதையை நோக்கி இட்டுச்சென்ற ஆனால் பயன்மிக்க ஒரு வருடம் 03 -04
அம்சக் கட்டுரை : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் பொது நூலகங்களும் 05
அசாதாரண பொதுக்கூட்டம் - SLLA 06
SLLA வெளியீட்டுக் குழு 2020/2021 06



மங்கள விளக்கேற்றலில் கலந்து கொண்டோர்



கலாநிதி கிருஷ்டீனா மதுஷியாக், இணைப் பேராசிரியர், நூலக தகவல் விஞ்ஞானம், டென்வர் பல்கலைக்கழகம், (அமெரிக்கா)



புத்மா பண்டாரநாயக்க மற்றும் கலாநிதி பிரதீபன் அமர்வுகளிற்கான தலைவர்கள் – NACLIS 2021




பங்குகொண்டோர் -NACLIS 2021

*Sri Lanka Library Association, Organization of Professional Associations, 275/75, Stanly Wijesundara Mawatha, Colombo 07, Sri Lanka, Tel/Fax: +94-11-2589103, Email:info@slla.lk.*


## ஊடக நூலகங்களும் அவற்றின் செயற்பாடுகளும் - இணையக்கருத்தரங்கு


இலங்கை நூலகச் சங்கத்தின் விசேட நூலகங்கள் குழுவானது ஊடக நூலகங்களும் அவற்றின் செயற்பாடுகளும் எனும் தலைப்பில் இணையக்கருத்தரங்கு ஒன்றை 2021 ஆவணி மாதம் 7ந்திகதி ஒழுங்குசெய்திருந்தனர். இதன் வளவாளராக திருமதி ரஞ்சனி அளுத்கே ஹேரத், பதில் பணிப்பாளர் மற்றும் பிரதம நூலகர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அவர்கள் பங்குபற்றினர். கலாநிதி எஸ்.கே. இலங்கரத்ன அவர்கள் இதன் நடுவராகப் பங்குபற்றினார். மூதவை உறுப்பினர்கள் உள்ளிட்ட நூலக துறைசார்ந்தோரும் மற்றும் மாணவர்களுமாக 70 ற்கு மேற்பட்டோர் இதில் பங்கு கொண்டனர். இக்கருத்தரங்கானது இலங்கை நூலகச் சங்க யூரியுப் அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டது.




## நூலகங்களில் ISO தராதரத்திற்கான அறிமுகமும் 5S முறையியலும் - இணையக்கருத்தரங்கு

இலங்கை நூலகச் சங்கத்தின் விசேட நூலகங்கள் குழுவானது நூலகங்களில் ISO தராதரத்திற்கான அறிமுகமும் 5S முறையியலும் - இணையக்கருத்தரங்கு ஒன்றை 2021 ஆவணி மாதம் 21ந்திகதி ஒழுங்குசெய்திருந்தனர். இதன் வளவாளராக ருவினி செனவிரத்ன, முகாமையாளர் தர உத்தரவாதம் மற்றும் புகார்கள், CIPM, இலங்கை, அவர்கள் பங்குபற்றினர். கலாநிதி எஸ்.கே. இலங்கரத்ன அவர்கள் இதன் நடுவராகப் பங்குபற்றினார். மூதவை உறுப்பினர்கள் உள்ளிட்ட நூலக துறை சார்ந்தோரும் மற்றும் மாணவர்களுமாக 70 ற்கு மேற்பட்டோர் இதில் பங்கு கொண்டனர். இக்கருத்தரங்கானது இலங்கை நூலகச் சங்க யூரியுப் அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டது.






## மாற்றத்திற்கான சந்தர்ப்பமாக உள்ள நெருக்கடிச்சூழ்நிலை– இணையத்தினூடாக பயிற்சிப்பட்டறை



இலங்கை நூலகச் சங்கம் இலவசமாக நடாத்திய இந்த இணைய பயிற்சிப்பட்டறையானது இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முக்கிய சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்நிகழ்வானது, இதில் பங்குபற்றியவர்களின் அனுபவங்களை பகிரவும், கலந்துரையாடவும், தமது எண்ணங்களையும் நடவடிக்கைகளையும் பரிமாறவும், இந்த நெருக்கடியான நிலையை எவ்வாறு சமாளிப்பது மற்றும் எவ்வாறு தம்மை ஊக்குவிப்பது என்பது பற்றியும் கலந்துரையாட சந்தர்ப்பத்தை வழங்கியது. இப்பயிற்சிப்பட்டறை 2021 ஆடி 24ந்திகதி Zoom வழியாக நடைபெற்றது. இலங்கை நூலகச் சங்க கல்வி நிகழ்வுகளிலிருந்து 100 மாணவர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வின் வளவாளராக கலாநிதி திருமதி கே.ஆர்.என். ஹர்ஷானி, தொழில் வழிகாட்டி ஆலோசகர், மற்றும் சிரேஷ்ட உதவி நூலகர், ரஜரட்டைப் பல்கலைக்கழகம் அவர்கள் பங்குபற்றினார். கிடைக்கும் சந்தர்ப்பத்தை எவ்வாறு எவ்வாறு அனுகூலமாக்குவது என்பது தொடர்பான குறிப்புக்களை கலாநிதி ஹர்ஷானி, வழங்கினார். மேலும் தொழில் தொடர்பான இலக்குகளுக்குரிய பல செயற்பாடுகளையும் மாணவர்களுக்கு வழங்கினார். கலாநிதி ஹர்ஷானியின் அறிவுரைகள் சரியான நேரத்தில் மாணவர்களுக்கு நேர்மறையாக வாழ்வதற்கும் நிகழ்நிலைக் கால நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களை எதிர்கொண்டு அதனோடு தொடர்பு கொண்டுவாழ்வதற்குமுரிய சந்தர்ப்பத்தை வழங்கியது



கலாநிதி ருவன் கமகே
தலைவர் SLLA 2020/2021

2020 ஒக்தோபர் 04 ஆம் திகதி, நாங்கள் அனுராதபுரத்திலிருந்து கொழும்பை நோக்கி பயணித்தது, அங்கு இடம்பெற்ற முதலாவது நிறைவேற்று சபைக் கூட்டத்தை முடித்துக் கொண்டதன் பின்னராகும். கொவிட்-19 தொற்றின் இரண்டாவது அலையின் தொடக்கம் தொடர்பான செய்தி இதன் போது எமக்கு எட்டியது. எமது பயணப் பாதையில் இருந்த சில கிராமங்கள் மூடப்பட்டிருந்தமையால். நாங்கள் வீடுகளை அடைந்தது மிகவும் சிரமப்பட்டவகையிலாகும்.

அன்று தொடக்கம், வருடம் பூராகவும் நாட்டில் முழு இயலுமையுடன் செயற்பட முடியவில்லை. அதனால் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு புதிய நடைமுறைகளை தேடுவதற்கான தேவை ஏற்பட்டதுடன், ஒன்லைன் சார்ந்த வேலைத் திட்டங்கள், தொலைத் தொடர்பு மற்றும் விநியோக முறைகளை நோக்கி நகர வேண்டியேற்பட்டது. நாடு பூராகவும் மூடப்பட்ட நிலையில் நூலக சங்கத்தின் (SLLA) அலுவலக ஊழியர்கள் வீடுகளில் இருந்தவாறே கடமையாற்றினார்கள். திறக்கப்பட்ட வேளைகளில் அனேகமாக வேளைநேர (Roster) அடிப்படையிலேயே கடமையாற்ற வேண்டியிருந்தது. சகல பரிபாலன சபைகள், நிறைவேற்று சபைகள் மற்றும் ஏனைய நிருவாக சபைக் கூட்டங்கள் ஒன்லைன் மூலமாகவே நடைபெற்றது.

முன்திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டிய முதலாவது நடவடிக்கையாக கல்வி நடவடிக்கை காணப்பட்டது. குறுகிய நாட்களுக்குள் மாணவர்களின் தொடர்பு விபரங்களை சேகரித்தோம். தொடர்புகளை பேணுவதற்காக சகல வகுப்புகளுக்காகவும் WhatsApp குழுக்களை ஏற்டுத்தினோம். நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவது முடியாததென்பதால், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கல்விக் குழுவை தொடர்பு கொள்வதற்காக பிரத்தியேகமான தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

வகுப்புக்கள் Zoom தொழிநுட்பத்தை பயன்படுத்தி தொடரப்பட்டது. கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக Zoom தொழிநுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக வரிவுரையாளர்களுக்கு பயற்சி வழங்கப்பட்டது. தொலைபாடநெறிகள் உள்ளிட்டதாக டிப்ளோமா / உயர் டிப்ளோமா நிகழ்ச்சிகள் (DLIS/HDIPLIS) மற்றும் நூலக தன்னியக்கமாக்கல் (COLA) தொடர்பான பாடநெறி தொடர்பான சகல பாடங்களும் ஒன்லைன் மூலம் நடாத்தப்பட்டது. COLA பாடநெறிக்காக கலந்து கொண்ட 50 பேர் இரு வழிமுறைகளினூடாகவும் COLA பாடநெறியை பூரணப்படுத்தியதுடன், DLIS/HDIPLIS பாடநெறிகளை தோடர்கின்ற 500 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்லைன் மூலமாக பரீட்சைகளைப் (மூன்று மட்டங்களும்) பூரணப்படுத்தினர். அவற்றின் பெறுபேறுகளையும் வெளியிடும் தருவாயில் உள்ளதுடன், புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்காகவும் தயார் நிலையிலுள்ளோம்.

மாணவர்களுக்கு பிரயோசனமளிக்கும் வகையில் மேலதிக வாசிப்பு சாதனமாக வளங்களின் பிரவேசமொன்று (Gateway of Resources) கல்வி நூலகக் குழுவினால் ஸ்தாபிக்கப்படுள்ளது. DLIS மாணவர்களுக்கு நூலக பயிற்சிக்காக நேரடியாக கலந்து கொள்ள முடியாமல் போனது. அதன் காரணமாக சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான DLIS மாணவர்களுக்காக வெவ்வேரான இரு நாள் ஒன்லைன் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

இவ்வாண்டு SLLA அதன் இலங்கை நூலக கல்வியின் 60 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. பரிசளிப்புடன் கூடியதாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட இவ் வைபவமானது தொற்று நிலைமைகள் காரணமாக கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டது. எவ்வாறாயினும் இம்முறை எமது கல்வி நிகழ்ச்சிகள் மூலம் ஈற்றப்பட்ட பிரதான வெற்றியாவது, இலங்கை நூலகச் சங்கத்தின் வேண்டுதலுக்கிணங்க, இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) மூலம் தயாரிக்கப்பட்ட நூலக மற்றும் விஞ்ஞான பாடநெறிக்கான தேசிய தொழில் தகைமை (NVQ) திட்டமிடலுக்காக பங்களிப்பு வழங்கப்பட்டது. அந்நிறுவனத்தின் மூலம் மற்றும் NVQ 5 மற்றும் 6 மட்டங்களுக்காக நூலக தகவல் விஞ்ஞான கற்பித்தலுக்காக பாடவிதானம் தயாரிக்கப்பட்டது. அது எதிர் காலத்தில் கல்வியலாளர் சபையொன்றின் மூலம் மேலும் பரீட்சிக்கப்படவிருக்கின்றது.

SLLA அலுவலக நடவடிக்கைகளை மாற்றியமைப்பது அடுத்த சவாலாகக் காணப்பட்டது. கணக்கீட்டு நடவடிக்கைகள் தற்போது தண்ணியக்கமாக்களுக்கு உட்படுத்தப் படுகின்றது.

அலுவலக மற்றும் தொழில் சார் சந்திப்புக்களுக்காக Zoom கணக்கொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அலுவலக ஊழியர்களுக்கு மைக்ரோசொப்ட் (Microsoft) அனுமதிப்பத்திரம் ஒப்படைக்கப்பட்டதுடன் தகவல்கள் (info@slla.lk), கல்வி (edu@slla.lk) மற்றும் உறுப்பினர்கள் (members@slla.lk) போன்ற பொது நடவடிக்கைகளுக்கான புதிய இலத்திரனியல் தபால் முகவரிகள் தாபிக்கப்பட்டன. வெப்தளமானது முதலாவது தொகுதி டொமைன் பெயருக்கு மாற்றப்பட்டது (slla.lk). உறுப்பினர்களுக்கு மாத்திரமன்றி கரிசனையுள்ள சகலருக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் யூடியுப் (www.youtube.com/sllalk) அலைவரிசையொன்றும், முகப்புத்தக பக்கமொன்றும் (www.facebook/slla.lk) நிர்மாணிக்கப்பட்டது.

SLLA வெளியீடுகள் சகலதும் இ-வெளியீடாக விநியோகிக்கப்பட்டது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் SLLA Newsletter ஐந்து தொகுதிகள் வெளியிட்டமை இவ்வருட வெளியீட்டுக் குழுவின் சாதனையாகும். Sri Lanka Library Review சஞ்சிகையின் முதலாவது தொகுதி மற்றும் இரண்டாவது தொகுதிகள் வெளியிடப்பட்டன. இச்சஞ்சிகையானது (sljol.info) மேடைக்கு உட்புகுத்தப்பட்டதானது இன்னொரு மைல்கல்லாகக் காணப்படுகிறது. அதற்கான அனுமதியைப் பெறும் நடைமுறைகளை ஆரம்பித்தமையிட்டு முன்னைய வெளியீட்டுக் குழுவை (2019/2020) இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். இதற்குப் புறம்பாக, கலாநிதி திருமதி ஆர்.எச்.ஐ.எஸ். ரணசிங்க அவர்களால் எழுதப்பட்ட **“இறுதியாண்டு உயர் டிப்ளோமா மாணவர்களுக்கான கட்டுரை எழுதுவதற்கான வழிகாட்டல்கள்”** என்ற வெளியீடு சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது.

**மறுபக்கத்தில் தொடரும்…..**

சுருக்கமாக குறிப்பிடுவதாயின் இவ்வருடத்தில் குறிப்பிடத்தக்க இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் செயற்பாடுகளை தரநிரணயப்படுத்தலும், குறிப்புக்களை தற்காலப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட முயற்சியுமாகும். சகல உறுப்பினர்களுக்கும் தற்காலப்படுத்தப்பட்ட தொடர்பு தகவல்களை அனுப்பும்படி செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க உறுப்பினர் பட்டியல் மற்றும் தபால் பட்டியல் என்பன தற்காலப்படுத்தப்பட்டன. பல காலங்களாக வரைபாகக் காணப்பட்ட அலுவலக நடைமுறைக் கோவையானது மீண்டும் கருத்தில் எடுக்கப்பட்டு அதன் இறுதி வடிவமாக இலங்கை நூலகச் சங்கத்தின் செயன்முறைக் கோவையானது சங்கத்தின் செயற்பாட்டுக் கைநூலாக வெளியிடப்பட இருக்கிறது. தந்திரோபாயத் திட்டமிடலை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்பார்வைச் சபையின் கீழ் இயங்குகின்ற சங்கத்தின் சட்டத்தைத் திருத்துவதற்கான துணைக் குழுவானது (COMAISP) தனது செயற்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றதுடன், முன்மொழியப்பட்ட சட்டவரைவானது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. COMAISP கீழான ஒரு செயற்திட்டமாக **"அநாதை விடுதிகளில் மற்றும் சிறுவர் விடுதிகளில் உள்ள நூலகங்களுக்கான குறைந்தளவான தரநிர்ணயம்"** என்ற நூல் வெளியிடப்பட்டது.

இவ்வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உறுப்பினர் திட்டத்தின் (Membership Drive) பெறுபேறாக செலுத்த வேண்டியிருந்த உறுப்புரிமைக் கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் பல உறுப்பினர்கள் தனது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொண்டனர். சார்ந்த உறுப்புரிமை மற்றும் உயர் உறுப்புரிமைக்காக 51 விண்ணப்பங்கள் கிடைத்தமையும், இதன் பெறுபேறாக பட்டய நூலகர்களின் எண்ணக்கை 329 வரை உயர்ந்துள்ளதுடன், முழு செயற்பாட்டு அங்கத்தவர்கள் இச்சந்தர்ப்பத்தில் 500 ஐ எட்டியுள்ளது.

அலுவலகம் ஊடாக நடைபெற்ற பணப் பரிமாற்றங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டதுடன் வங்கிக் கணக்கிற்கு மாத்திரம் பணம் வைப்பிலிடுமாறு உறுப்பினர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. நாளாந்த கணக்குகள் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக கடந்த வருடத்தில் நடாத்தப்பட்ட தொகுதிக் கணக்காய்வின் இன்னொரு பகுதி நடைமுறைப் படுத்தப்பட்டது.

இலங்கை தேசிய நூலகம் (NLSL), தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனம் (NILIS) - கொழும்புப் பல்கலைக்கழகம், நூலக தகவல் விஞ்ஞான திணைக்களம் - களனிப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக நூலகர்களின் சங்கம் (ULA), சர்வதேச நூலகச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் சம்மேளனம் (IFLA), தகவல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப (ASIS&T) சங்கம் போன்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்த்தேர்ச்சியாக தொடர்புகளை நூலக சங்கமானது பேணி வந்தது.

NLSL மூலம் தயாரிக்கப்பட்ட கொவிட் - 19 ஆலோசனைச் சுற்றுநிறுபம் தொடர்பாக மக்களை தெறியப்படுத்துவதற்காக எமது சங்கமானது பங்ளிப்புச் செய்தது. அரச மற்றும் மாகாண நூலகர்களுக்காக முன்மொழியப்பட்ட சேவை யாப்பை தயாரிப்பதற்காக நாங்கள் பங்களித்ததுடன், சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்காக இலங்கை சம்பள ஆணைக்குழு மூலம் முன்மொழிவுகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அரச நூலகர் குழுவின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டது. அதேபோன்று நூலக சங்கம் மூலம் வழங்கப்படுகின்ற நூலக விஞ்ஞான தகைமைகளில் அண்மைய கால மாற்றங்கள் தொடர்பாக தெறியப்படுத்தும் வகையில் அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் சேவைகள் பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தி அலகின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை நூலக வழிகாட்டலை தயாரிப்பதற்காக பாடசாலை நூலகக் குழுவின் Convenor கலந்து கொண்டார்.
SLLA இன் முன்னால் தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் பியதாஸ ரனசிங்க அவர்களின் 5 வது ஞாபகார்த்தத்தை முன்னிட்டு நினைவுக் கட்டுரையொன்று ASIS&T தென் ஆசிய கிளையின் செய்தி மடலுக்கு அனுப்பப்பட்டது.

SLLA 2020 / 2021 Council தொழில்துறைக் குழு மற்றும் நிருவாகக் குழு மூலம் பல webinars நடத்தப்பட்டன. அரச நூலகர்களை பணிக்கமர்த்துவதற்கான போட்டிப்பரீட்சைக்கான கருத்தரங்குத் தொடர், பாடசாலை நூலக ஊழியர்களுக்கான நூலக வழிகாட்டல், கூகில் வேலைத்தளம் (கடவுச்சொல்), புலமைச்சொத்து மற்றும் வெளியீட்டு உரிமைச்சட்டம், முரண்பாடுகளைத் தாண்டிய சுவாரஷ்யமான சந்தர்ப்பங்கள் (ஊக்குவிப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை) மற்றும் ஊடக நூலகங்கள் மற்றும் அவற்றுள் செயற்பாடுகள் என்பன அவற்றில் உள்ளடங்கும். இவற்றுக்கு புறம்பாக பல்கழைக்கழக நுழைவை எதிர்பார்க்கின்ற உயர்தர மாணவர்களுக்காக கொழும்பு பொதுநூலகத்துடன் இணைந்து கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. மேலும் 2021 நூலக தகவல் விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு (NACLIS) 2021 செப்டம்பர் 11 ஆம் திகதி ஒன்லைன் மூலமாக நடைபெற்றது. அரச நூலகர்கள் குழுவினால் 'பிரதிராவ' என்ற பெயரில் சஞ்சிகையொன்றை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுவாக நோக்குகின்ற போது, நடைமுறையில் மற்றும் பங்குபற்றுதலில் புதிய பாதையை கண்டறிந்த வகையில் இணையம் ஊடாக பணி புரிவதற்கு நிகழ்கால உலக நிலமைகள் எம்மையும் ஊக்குவித்தது என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். 2020 / 2021 காலத்தில் இலங்கை நூலகச்சங்கத்தின் தலைவர் என்றவகையில் கடந்தவருடம் பூராகவும் இடம் பெற்ற சகல செயற்பாடுகளிலும் வழங்கிய ஒத்துழைப்புக்காக நிர்வாக சபை, நிறைவேற்று சபை, உறுப்பினர்கள், மாணவ மாணவிகள், சேவை வழங்குனர்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவிப்பவர்களுக்கு எமது வணக்கங்களை தெரிவிப்பதுடன், அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

கலாநிதி ருவன் கமகே,
தலைவர்,
இலங்கை நூலகச் சங்கம் (2020/ 2021)

**உங்கள் தொடர்பு விபரங்களை நீங்கள் இன்னும் பதிவு செய்யவில்லை எனின்**

**பின்வரும் தொடர்பில் விண்ணப்பத்தப் பெற முடியும்.**
**https://forms.gle/4eiRXog8fva2MWf7A**



# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும பொது நூலகங்களும்



**கலாநிதி எம்.எம்.மஸ்றூபா**
சிரேஷ்ட உதவி நூலகர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

செப்டம்பர் 2015 இல் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UNO) தலைமை அலுவலகத்தில், 70 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடைபெற்ற மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals –SDGs) முன்மொழிந்தது. ஒட்டுமொத்தமாக இந்த 17 இலக்குகளும் 169 நோக்கங்களையும் (Targets) அடைவினை மதிப்பிடுவதற்கு 244 சுட்டிகளையும் (Indicators) கொண்டுள்ளன. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) உலகம் முழுவதும் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன. ஏனெனில் இது உலகை மாற்றுவதற்கான உலகளாவிய ஓர் நிகழ்ச்சி நிரலாகும். இதற்கான செயல்திட்டமானது மக்கள், மேம்பாடு, சமாதானம், கிரகம் மற்றும் கூட்டாண்மை போன்ற விடயங்கள் தொடர்பான அபிவிருத்தியை உணர்த்துவதாக ஐக்கியநாடுகள் (ஐ.நா) பிரகடனம் செய்கின்றது. குறித்த மாநாட்டில் பங்குபற்றிய 193 நாடுகள் இந்த 17 குறிக்கோள்களை தங்களது அபிவிருத்தி நிரல்களாக உள்ளடக்கியுள்ளன. SDGs முக்கியமாக பொருளாதாரம், சமூகம், மற்றும் சுற்றுச்சூழல் போன்ற மூன்று அம்சங்களை முக்கியமாகக் கருதுகின்றன. இம் மகாநாட்டில் பங்கேற்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கையும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த 17 நீண்டகால இலக்குகளும் 2016 ஜனவரியில் ஆரம்பித்து 15 ஆண்டுகளில் அடையப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த 17 நீண்டகால இலக்குகளும் 2016 ஜனவரியில் ஆரம்பித்து 15 ஆண்டுகளில் அடையப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த 17 SDGs உம் கீழே காட்டப்பட்டுள்ளன. (ஐ.நா. 2015).SDGs உம் கீழே காட்டப்பட்டுள்ளன. (ஐ.நா. 2015).

அனைத்து பங்கேற்பு நாடுகளும் வறுமை, பட்டினி, நோய் ஆகியவை இல்லாத உலகம், மற்றும் அனைத்து உயிர்களும் செழிப்பாக அபிவிருத்தியடைய விரும்புவதாகவும் அறிவித்தன. பயம், மற்றும் வன்முறையற்ற உலகத்தையும் அவர்கள் கற்பனை செய்கின்றனர். உலகளாவிய கல்வியறிவு (Universal Literacy), கல்விக்கான சமமான மற்றும் உலகளாவிய சந்தர்ப்பம், சமூக பாதுகாப்பு, மனித உரிமைகள், பாதுகாப்பான குடிநீர், உயர்ந்த சுகாதாரம், போதியளவு போசாக்குள்ள உணவு, மற்றும் நம்பகத்தன்மையுள்ள சமத்துவமான, நிலைபேறான ஆற்றல் கொண்ட உலகளாவிய வாய்ப்பைக் (Universal Access) கொண்ட ஓர் உலகத்தை எதிர்பார்க்கின்றனர்.

அரசாங்கங்கள் மாத்திரமன்றி நூலகங்கள் உட்பட அனைத்துப் பங்குதாரர்களும் சரியாகத் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும் எனவும் நூலகங்கள் சரியான “தகவலுக்கான வாய்ப்பை (Access to Information)” வழங்குவதன் மூலம் 17 இலக்குகளையும் அடைவதற்கு துணை போகலாம் என்று நூலக சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பு (IFLA, 2021) அறிவித்துள்ளது.

| இலக்கு | செயற்பாட்டுவிபரம் |
|---|---|
| இலக்கு 1<br>வறுமை ஒழிப்பு | • வேலைவாய்ப்பு தொடர்பான தகவல் சேவைகள் : தற்குறிப்பு (Resume) எழுதுவதற்கான, மற்றும் வேலைகளுக்கு விண்ணப்பிப்பதற்குரிய முறைகள் தொடர்பான பயிற்சிவகுப்பகளை நடாத்துதலும், வழிகாட்டுதலும்.<br>• தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டிற்கான தகவல் சேவைகளை வழங்குதல் (Entrepreneurial Economic Development).<br>• தொழில் வாய்ப்புகள் மற்றும் வணிக நடவடிக்கைகளை உருவாக்குதலும் வழங்குதலும். |
| இலக்கு 2<br>பட்டினி ஒழிப்பு | • விவசாயம், பண்ணை வளர்ப்பு, சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கூடிய நிதித் தகவல் சேவைகளை (Financial Information Service) சிவில் சமூகத்தினருக்கு வழங்குதல்.<br>• துணைச்சேவைகள், கடன் வசதிகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு வாசகர் கல்வியூட்டல் |
| இலக்கு 3<br>நல்லாரோக்கியம் | • சுகாதார தகவல் சேவைகளை (Health Information Service) வழங்குதல்.<br>• தற்காலத்தில் அதிகம் பேசப்படுகின்ற தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல். உதாரணம் : கொரோனா, டெங்கு. |
| இலக்கு 4<br>தரமான மற்றும் சமத்துவான கல்வி | • கற்றலுக்கான இடவசதிகள். (Learning Spaces)<br>• பௌதீக மற்றும் மெய்நிகர் வளங்களை அணுகுவதற்கான வசதிகள், மின் வளங்களுக்கான கூட்டமைப்பு (Consortia for e- resources)<br>• டிஜிட்டல் சேவைகள்<br>• எழுத்தறிவு நிகழ்வுகள் (Literacy Programme)<br>• அனுபவம் நிறைந்த கல்வி வாய்ப்புகள் |
| இலக்கு 5<br>பால்நிலை சமநிலை | • பெண்களை மேம்படுத்தும் நிகழ்வுகள்.<br>• பால்நிலை சமத்துவம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், மகளீர் உரிமைகள், சுகாதாரம், கல்வியறிவு போன்ற விடயங்கள் தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை நடாத்துதலும் வழிகாட்டுதலும்.<br>• பால்நிலை தொடர்பான நிகழ்வுகளுக்கு இடம் வழங்கல் |
| இலக்கு 8<br>நல்ல தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி | • இது இலக்கு 1 உடன் சார்ந்திருப்பதனால் SDG 1 ஐ ஆதரிப்பதற்கான செயற்பாடுகள் SDG 8 க்கும் பொருத்தமானவை. |
| இலக்கு 9<br>புதுமை மற்றும் உட்கட்டமைப்பு | • இணையப்பாவனை வசதிகள், அணுகல் மையங்கள், டிஜிட்டல் பிளவுகளை (Digital Divide) குறைக்க உதவும்.<br>• செயற்பாட்டு எழுத்தறிவிற்கு (Functional Literacy) தொழில்நுட்பபரிமாற்றம்.<br>• படைப்பாற்றல், புதுமையான திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வளர்க்கக் கூடிய ‘Maker Space’ சேவைகளை அறிமுகப்படுத்தல். |
| இலக்கு 10<br>ஏற்றத் தாழ்வுகளை அகற்றல் | • எல்லா வாசகர்களையும் அவர்களுடைய இனம், குலம் போன்ற விடயங்களுக்கு அப்பால் சமமாக நடாத்துதல், சேவைகளை வழங்குதல்.<br>• ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர், சிறுமியர்களை சமமாக நடாத்துதல். இது இலக்கு 5 உடன் இணைகின்றது. |
| இலக்கு 11<br>நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | • சமூகத்துடன் ஓர் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் குடியரிமை உணர்வை சிவில் சமூகத்தினரிடம் உயர்த்துதல் / மேம்படுத்தல்.<br>• குடியுரிமை உணர்வு (Civic Sprit), சமூக–குடியுரிமை ஒற்றுமையை (Socio – Civic Relation) மேம்படுத்துவதற்கு ஜனநாயக பொது இடமாக (Democratic Space) செயற்படல்.<br>• SDG தொடர்பான தனிநபர் பொறுப்புக்களைப் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல். |
| இலக்கு 15<br>தரையில் வாழ்க்கை | • பசுமை நூலகம் எனும் எண்ணக்கருவை செயற்படுத்தலும் ஊக்குவித்தலும். |
| இலக்கு 16<br>அமைதி நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | • இது இலக்கு SDG 11 உடன் இணைகின்றது.<br>• நூலகமையம் /அறிவுமையம் (Library hub / Knowledge hub) மூலம் வளப்பகிர்வு.<br>• திறந்த அரச முயற்சிகள் ஏதும் இருந்தால் அவற்றை ஆதரித்தல். |
| இலக்கு 17 இலக்கை அடைவதற்கான கூட்டாண்மை | • உள்ளூராட்சி மன்றங்கள் (மாநகராட்சி, நகராட்சி, பிரதேசசபை), பல்கலைக்கழகங்கள், நூலக அமைப்புகள், தேசிய நூலகம், மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து வழங்குதல். |

**இந்த முயற்சியில் பொது நூலகங்களின் நிலைப்பாடு என்ன?**

IFLA (2021) ஒரு கருவித் தொகுப்பினை (Toolkit) அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் நோக்கம் தேசிய மற்றும் பிராந்திய மேம்பாட்டு திட்டங்களில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்வாங்கிய நூலகங்களை ஒன்று திரட்டுவதும், தகவலுக்கான அணுகலை / வாய்ப்பை ஆதரிப்பதும் ஆகும். இந்த ஆதரவு மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டவை. அவை பிராந்திய, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் உள்ள நூலகங்களுக்கு ஆதரவளித்தல், உலகளாவிய மட்டத்தில் நேரடி ஈடுபாட்டை ஏற்படுத்துதல் மற்றும் நூலகங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குட்டமைப்பிற்கான கருவிகளையும் பொருட்களையும் வழங்குதல் ஆகும்.

IFLA வின் உலக நூலக வரைபடம் (IFLA's Library Map of the World) என்பது உலக நாடுகளிலுள்ள நூலகங்களின் SDGs செயற்பாடுகளை மதிப்பிடுவதற்குரிய ஒரு சிறந்த காட்டியாகும். இந்த வரைபடம் நூலகத்திற்கு வருகைதரும் வாசகர்களின் எண்ணிக்கையை ஒரு சுட்டியாக பயன்படுத்துகின்றது. IFLA ஐ.நா.வின் உயர்மட்ட அரசியல் மன்றங்களில் பங்குபற்றுகின்றது. அதேபோல IFLA அனைத்து நூலகங்களையும் அந்தந்த அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இதேபோல் பங்கேற்க வேண்டும் என ஊக்குவிக்கின்றது. பொது நூலகங்கள் நிலைபேறான அபிவிருத்திக்கான மையமாகவும், தலைசிறந்த செயற்பாடுகள் மூலம் அபிவிருத்திக்கான நங்கூரங்கள் மற்றும் தளங்களாகவும் பணியாற்ற முடியும் என Pastana (2016) இல் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரேசில், எகிப்து, அயர்லாந்து, தென்கொரியா, உகண்டா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளிலுள்ள நூலகங்கள் SDGs இனை அடைவதற்கான நோக்குடன் பல்வேறு தந்திரோபாய நடவடிக்கைகளை வடிவமைத்து அவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தவதில் முன்னோடிகளாகக் காணப்படுகின்றன. நூலகங்கள் குறிப்பிட்ட செயற்பாடுகளை விளம்பரப்படுத்துவதற்கு சிற்றேடுகளைத் தயாரிக்கவேண்டும். சில நாடுகளிலுள்ள பொது நூலகங்கள் இவ்வாறான சமூகசேவைகளை SDGs இனை அடையும் நோக்குடன் முன்னெடுக்கும் வேளை, நாங்கள் அவற்றை கவனத்தில் எடுக்காது பாரம்பரிய சேவைகளில் மாத்திரம் இன்னும் ஏன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்? பொது நூலகங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் முக்கிய பங்காளர்களாக இருப்பதனால் தகுந்த தந்திரோபாய செயற்பாடுகளை வகுத்து சமூகசேவைகளை விரிவுபடுத்துவது அவசியமாகும். பொது நூலகங்கள் ஈடுபடக்கூடிய சில செயற்பாடுகள் மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

இலக்கு 6,7,12,13.14 ஆகியவை பொது நூலகங்களின் செயற்பாடுகளுடன் நேரடியாகப் பொருந்தாது. எனினும் இந்த இலக்குகள் தகவலுக்கான வாய்ப்பை / அணுகலை (Access to Information) மேம்படுத்துவதன் கீழ் பொது நூலகங்களால் கவனிக்கப்பட்டு ஆதரவளிக்கப்படலாம். ஒருமாவட்டத்தில் அல்லது ஒரு நகராட்சியில் உள்ள ஏதாவதொரு பொது நூலகம் குறிப்பாக முன்னணியில் உள்ள நூலகம் ஒரு வலைப்பின்னலை உருவாக்கி அப்பிரதேசத்தில் உள்ள ஏனைய நூலகங்களையும், சனசமூக நிலையங்களையும் ஒன்றிணைத்து நூலகமையம் / அறிவுமையம் (Knowledge hub/ Library hub) மூலம் இவ்வாறான முன்னெடுப்புக்களை அமுல்படுத்த முடியும். இந்த நூலகமையங்களின் மூலம் இலத்திரனியல் வளங்கள், மற்றும் பல்வேறுபட்ட சேகரிப்பகளுக்கான அணுகல், உகந்த கற்றல் சூழல், எழுத்தறிவு நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவற்றை ஒருங்கிணைக்க முடியும். இந்தவகை அறிவுமையங்கள் பாடசாலை நூலகங்கள், கல்லூரி நூலகங்கள், பொது நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், தேசிய நூலகங்கள் மற்றும் வழிபாட்டு தளங்கள் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கப்படுகிறது.

**பரிந்துரை**

இந்த ஆய்வறிக்கை பொது நூலகங்களை வழிகாட்டும் இலங்கை தேசிய நூலகமும் ஆவணவாக்கல் சபையும் மற்றும் சிறிலங்கா நூலக அமைப்பும் இணைந்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய ஓர் தந்திரோபாயத் திட்டத்தினை வகுக்க வேண்டும் என பரிந்துரைக்கிறது. இதன் மூலம் பொது நூலகங்களின் வெற்றிகரமான முயற்சிகளுக்கு ஆதரவளித்தல், வழிகாட்டுதல், நிதி உதவிகளைப் பெற உத்திகளை அமைத்தல் போன்ற விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கலாம்.

## References


Corradini, F. (2020), Sustainable Development Goals in libraries of the German-speaking countries, *Journal of EAHIL* 2020; Vol. 16 (4): 11-14 doi: 10.32384/jeahil16439

IFLA (2021), IFLA Toolkit: Libraries, Development and the United Nations 2030 Agenda (Revised version - March 2021), Available at https://www.ifla.org/publications/node/10156

Pastana, Q.J.V.(2016), Libraries as a Sustainable Development Tool: an Integrated Framework and Strategy, *Oxford project*, Southeast Asia Conference, Available at https://www.academia.edu/24913314/Libraries_as_a_Sustainable_Development_Tool_an_Integrated_Framework_and_Strategy

United Nations (UN) (2015), "Transforming our world: the 2030 agend a for sustainable development", https://sustainabledevelopment.un.org/content/documents/21252030%20Agenda%20for%20Sustainable%20Development%20web.pdf (accessed 12 December, 2020).


## இலங்கை நூலகச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்


இலங்கை நூலகச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தினை நிகழ்நிலையில் நடாத்துவதற்கான உறுப்பினரின் பிரேரணையை எடுக்குமுகமாக கடந்த செப்ரெம்பர் 24ந்திகதி நிகழ்நிலையிலான விசேட பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வில் இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவர், உறுப்பினருக்கான பரிந்துரைகள் மற்றும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் வாக்களிப்பு என்பவற்றில் எவ்வாறு பாதுகாப்பும் இரகசியத்தன்மையும் பேணப்படும் என்பதை விளக்கிக்கூறினார்.

உறுப்பினர்கள் ஏகமனதாக அதற்கு அனுமதியளித்தனர்.

எனினும் அவர்கள் இக்கால நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இப்போதுள்ள மூதவை (Council) தொடர்ந்தும் நாட்டின் சூழ்நிலை வழமைக்கு வரும்வரை இயங்குவதில் உள்ள சாத்தியக் கூற்றை வினாவினார்கள்.

எனினும் தற்போதுள்ள மூதவை உறுப்பினர்கள் வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதை உறுதிப்படுத்தியுள்ளமையையும், சில உறுப்பினர்களுக்கு தொடர்ந்து இயங்குவதில் உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளையும் தலைவர் வலியுறுத்திக் கூறினார். இக்கூட்டம் மிகக் குறுகிய கால அளவைக் கொண்டிருந்தாலும் மிகுந்த மகிழ்ச்சியானதாக அமைந்தது. சில நிமிடங்கள் உறுப்பினர்கள் நட்புறவுடன் ஒருவருக்கொருவர் அளவளாவ முடிந்தது.








## SLLA வெளியீட்டுக்குழு 2020/2021

**பிரதான குழு**

| | |
|---|---|
| த.சிறீதரன் | சந்திமா வதசிங்க |
| கோ.முருகதாஸ் | பி.என்.ஜீ.எஸ் பிரேமரத்ன |
| ஏம்எஸ்எம் சிஹாம் | ஏவீஎஅகே அன்கும்பரா |
| டபிள்யு பவித்ரா | |

**செய்தி மடல் - உபகுழு**

| | |
|---|---|
| த.சிறீதரன் | கஜனி லசந்த பெரேரா |
| கோ.முருகதாஸ் | |

**பருவ இதழ்– உபகுழு**

| | |
|---|---|
| த.சிறீதரன் | பி.என்.ஜீ.எஸ் பிரேமரத்ன |
| சந்திமா வதசிங்க | எஸ். நவநீதகிருஷ்ணன் |